தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

ஆறாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2015**

**D051** தமிழகக் கலைகள்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. கச்சி மாநகரில் உள்ளது என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடும் வைணவத் தலம் எது?
2. ‘பிறவா யாக்கைப் பெரியோன்’ என்று சிலப்பதிகாரம் யாரைக் குறிப்பிடுகிறது?
3. காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலைக் கட்டிய பல்லவ மன்னன் யார்?
4. பழநிக் கோயிலில் நவபாஷாணத்தாலான இறைத்திருமேனியை அமைத்தவர் யார்?
5. சிற்பக் கலைஞரைச் சிலப்பதிகாரம் எவ்வாறு குறிப்பிடுகின்றது?
6. காவல் மரத்திலிருந்து விழுந்த மாங்கனியை எடுத்துண்ட பெண்ணுக்குக் கொலைத் தண்டனை வழங்கிய மன்னன் யார்?
7. தமிழ்நாட்டில் முதன்முதலில் எக்ஸ்ரே ஓவியம் எந்த ஊரில் கிடைத்துள்ளது?
8. சித்திரக் கலையில் சிறந்தவனாக விளங்கிய பல்லவ மன்னன் யார்?
9. பாணனின் துணைவி பழங்காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டாள்?
10. அப்பரின் தமக்கையார் பெயர் என்ன?
11. கஞ்சக் கருவிகள் எதனால் செய்யப்பட்டன?
12. இந்திர விழாவில் மாதவி எத்தனை வகை ஆடல்களை ஆடிக் காட்டினாள்?
13. திரைப்படத்தில் வில்லுப்பாட்டினை அறிமுகம் செய்த பெருமைக்கு உரியவர் யார்?
14. குற்றாலக் குறவஞ்சியை இயற்றியவர் யார்?
15. காவடியாட்டம் எந்தத் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையது?

## பிரிவு - 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. மதுரையையும் அங்குள்ள கோயிலையும் பரிபாடல் எவ்வாறு வருணிக்கின்றது?
2. திருமலை நாயக்கர் மகாலின் சிறப்புகளைக் குறிப்பிடுக.
3. விலங்குமுக மனித ஓவியம் – சிறு குறிப்பு வரைக.
4. சித்தன்னவாசலில் உள்ள தாமரைப் பொய்கை ஓவியம் பற்றி எழுதுக.
5. தொல்காப்பியத்தில் காணப்படும் இசைத் தமிழ் தொடர்பான செய்திகளை எழுதுக.
6. அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து 'உயிரைக் காத்த மெட்டு' என்று கூறப்பட்டதன் வரலாற்றை எழுதுக.
7. நொண்டி நாடகங்களின் பொதுவான கதைக்கரு யாது?
8. மயில் நடனம் ஆடுபவர் பார்வையாளரை மகிழ்விக்க மேற்கொள்ளும் வியத்தகு செயல்கள் யாவை?

## பிரிவு - 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பல்லவர் காலக் கற்கோயில்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) 'சுதைச் சிற்பங்கள்' என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

2. (அ) சோழர் காலக் கோயில் ஓவியங்களின் சிறப்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) கோபாலகிருஷ்ண பாரதியாரின் கீர்த்தனைத் தொண்டினை விளக்குக.

3. (அ) இக்கால நாடக வகைகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) பாடுபொருள் அடிப்படையிலான நாட்டிய நாடகங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துகளை விவரிக்க.

✷✷✷